### கழக தலைவர் – முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதகரம்” 40-வது நாள்!

## அம்பத்தூர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,ஏப்.1-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 40 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளில் நேற்று (31.3.2025) அம்பத்தூர் வடக்கு பகுதி 1) புதூர் மெயின்ரோடு, தாங்கல் பூங்கா சென்னை (80வது வட்டம்) 2) பானு நகர் முதல் பிரதான சாலை, சென்னை ஆகிய பகுதிகளில் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் “தமிழ் நாட்டு நலன்களையும், எதிர் காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டிஎஸ்பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

### சுங்கச் சாவடிக் கட்டண உயர்வால்

# விலைவாசி உயரும் - கட்டுமானத் தொழிலாளர்கள் வேலையிழப்புகள்!

## விவசாயிகள்- தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம்!



சென்னை, ஏப். 1 -

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தவறான பொருளாதார கொள்கை மற்றும் ஜிஎஸ்டி போன்றவற்றால் ஏற்கனவே கடும் விலைவாசி உயர்வில் உள்ள நிலையில் தற்போது ஒன்றிய அரசு சுங்க சாவடி கட்டணங்களை இன்று இரவு முதல் உயர்த்தப் போவதாக அறிவித்திருப்பது வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதற்கு சமமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள 40க்கும் மேற்பட்ட சுங்க சாவடிகளில் இன்று இரவு முதல் 10 சதம் வரை கட்டணத்தை உயர்த்த ஒன்றிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இது மேலும் விலை உயர்வுக்கு வழி கோலும்.

இந்தியா போன்ற விவசாய நாட்டில் விவசாயம் பொய்த்து வரும் நிலையில் பெருவாரியான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரே தொழிலாக கட்டுமானத் தொழில் விளங்கி வருகிறது. ஏற்கனவே சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி போன்றவற்றின் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு கடுமையாக உள்ளதால், இந்த தொழில் முடங்கும் அபாயத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையில் சுங்கக் கட்டண உயர்வு இந்த பொருட்களின் விலை ஏற்றத்தை உச்சத்திற்கு கொண்டு சென்று விடும். இதனால் லட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் வேலை இழக்க கூடிய அபாயம் ஏற்படும்.

சாமானிய மக்கள் முதல் அனைவரும் பயன்படுத்தக் கூடிய காய்கறிகள், மளிகைப் பொருட்களின் விலையும் இந்த சுங்கக் கட்டண உயர்வால் உயரும். இதனால் சாமானிய மக்களும் பாதிக்கப்படுவர். தமிழ் நாட்டில் பரந்தூர் போன்ற காலாவதியான சுங்கச் சாவடிகள் தொடர்ந்து அனுமதித்து, வசூல் வேட்டையில் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருவது மிகுந்த கண்டனத்திற்குரியதாகும். 15 ஆண்டு களுக்கு மேல் உள்ள சுங்கச் சாவடிகளை மூட வேண்டும் என்பது ஒன்றிய அரசின் விதியாகும். ஆனால் எதைப் பற்றியும் கவலைப்படாத ஒன்றிய அரசு தொடர்ந்து அப்படிப்பட்ட சுங்கச் சாவடிகளை அனுமதிப்பதோடு இப்போது கட்டணத்தையும் உயர்த்தி இருக்கிறது. காலாவதியான சுங்க சாவடிகளையும் தமிழ்நாட்டில் பெருவாரியான சுங்கச் சாவடிகளையும் அகற்ற வேண்டும் என லாரி உரிமையாளர்கள், பொதுமக்கள், வியாபாரிகள், ஏன் தமிழ்நாடு அரசும் தொடர்ந்து வலியுறுத்தி வரக்கூடிய நிலையில், தற்போது 10 சத சுங்கக் கட்டண உயர்வு சாமானிய மக்களின் தலையில் விழுந்த இடியாகும்.

ஒன்றிய மோடி அரசு உடனடியாக இந்த கட்டண உயர்வை நிறுத்த வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இந்த கட்டண உயர்வை கண்டித்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி போராட்டம் நடத்தும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### ஒட்டப்பிடாரம் தொகுதி!

# பண்டாரம்பட்டி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – எம்.சி. சண்முகையா வலியுறுத்தல்!



சென்னை, ஏப்.01-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**எம்.சி. சண்முகையா:** ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில், தூத்துக்குடி தாலுகா, மறவன்மடம் ஊராட்சியில் 110 kilovolt துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதற்காக tender கோரப்பட்டுள்ளது. மீண்டும் பண்டாரம்பட்டி கிராமத்தில் குறைந்த மின்னழுத்தம் உள்ளதால், மின்துறை அமைச்சர் புதிய மின்மாற்றி அமைத்துத் தருவாரா?

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** ஒட்டப்பிடாரம் தொகுதியில் இரண்டு துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதில் ஒரு துணை மின் நிலையத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு துணை மின் நிலையத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். புதிய மின்மாற்றி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். இந்த வாரம், துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, அங்கே ஆய்வு செய்து, தேவையேற்படின் அது மாற்றி அமைக்கப்படும் உறுப்பினர் அவர்களுக்குத் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் நசரத்பேட்டை ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் த.திருமலைராஜ் முன்னிலையில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர் நீர் மோர் தர்பூசணி உள்ளிட்ட பல்வேறு பழ வகைகள் வழங்கினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, சி.ஜெரால்டு, எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஏ.ஜனார்த்தனன், எம்.இளையான் , எஸ்.புகழேந்தி , ஏ.ஆர்.பாஸ்கர், வயலை பிரபாகரன் வி.பி.பிரகாஷ், பரிமளழகன், ஏ.ஜி.ரவி, ந.சண்முகம் , கேசவன், நாசா பாலா, கே.ஜி.ஆர்.ஸ்டாலின், தேவதாஸ், மணிகண்டன், ஏழுமலை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

# வழக்கறிஞர்களின் வணக்கத்திற்குரிய மக்கள் முதல்வர்!



**எல்லார்க்கும் எல்லாமும் :**

தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று கடந்த 46 மாதங்களில் எண்ணற்ற ஏற்றமிகு திட்டங்களால் தமிழ் நாட்டை நாட்டிலேயே தலைசிறந்த முன்னணி மாநிலமாக மாற்றியுள்ளார். ‘எல்லாருக்கும் எல்லாமும்’ கிடைக்க அனுதினமும் சிந்தித்து சீரிய நல்ல பல திட்டங்களை அமல் படுத்தி வருகிறார்.

அனைத்து சமுதாயத்தைச் சார்ந்தவர்களின் நலனையும் மேம்படுத்த அயராது உழைக்கும் நம் முதல்வர் அவரது மனதிற்கு உகந்த வழக்கறிஞர்களின் மேம்பாட்டில் தனி கவனம் செலுத்தி வருகிறார்.

**வழக்கறிஞர் சமுதாயம் - முதல்வர்உரை:**

வழக்கறிஞர்கள்தான், சமூகத்தில் நிலவுகின்ற அநீதி என்ற நோயைக் குணப்படுத்துகின்ற மருத்துவர்கள் என்று வழக்கறிஞர்களை வெகுவாகப் பாராட்டி 15.03.2025 ஆம் தேதியன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் தமிழ் நாட்டைச் சார்ந்த மூன்று உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் முன் அவர் ஆற்றிய உரை இன்றும் அந்த வளாகத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஜனநாயகத்தை செதுக்குவதில், வழக்கறிஞர்கள் மற்றும் நீதியரசர்களுடைய பங்களிப்பை நான் மிகவும் பாராட்டுகிறேன் என்ற நமது முதல்வரின் அருமையான உரை அவர் சட்டத்தின் ஆட்சி, நீதித்தறை மற்றும் வழக்கறிஞர்கள் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள அபரிதமான நம்பிக்கை அனைத்தையும் நன்கு வெளிப்படுத்தியது.

**ஒப்பற்ற சாதனை செய்த முதல்வர்:**

இதற்கு முன் எந்த தமிழக முதல்வரும் இத்தனை முறை சென்னை உயர்நீதிமன்ற வளாகம் வந்து சட்டத்தின் ஆட்சியை வலியுறுத்தி வலிவு சேர்த்ததில்லை. அது மட்டுமின்றி முன்னாள் இந்திய தலைமை நீதியரசர்கள், நீதியரசர் N.V. ரமணா, D.Y. சந்திரசூட் போன்றோர்கள் முன்னிலையிலும் மற்றும் தற்பொழுது தமிழகம் தந்த உச்சநீதிமன்ற நீதியரசர்கள் M.M. சுந்தரேஷ் , R.மகாதேவன் மற்றும் K.V. விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையிலும் நீதித்துறை யில் சமூக நீதியைப்பின்பற்றி நீதிபதிகள் நியமனம், தமிழ் நாட்டில் உச்ச நீதிமன்றக் கிளை, மாநில உரிமைகளைக் காத்து ஜனநாயகத்தை முறையாக செதுக்க வேண்டிய கடமை ஆகியவைகளை வலியுறுத்தி அதே நேரத்தில் அரசமைப்புச் சட்டத்துக்கு மெருகூட்டுகின்ற பல தீர்ப்புகளை, நம்முடைய நீதியரசர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டி உரையாற்றி ஒப்பற்ற புகழைப் பெற்றார் நமது முதல்வர்

**வழக்கறிஞர்**
**இரா.விடுதலை**
*மூத்த வழக்கறிஞர்*
*கழக சட்டத்துறைத் தலைவர்*



**முத்தமிழறிஞர் கலைஞருக்கு முதல் மரியாதை:**

சென்னை உயர்நீதிமன்றம் தொடங்கப்பட்டது 1861 ஆண்டு. 112 ஆண்டுகளுக்குப்பின் சென்னை உயர் நீதிமன்றத்தில் முதன் முறையாக 1973 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நம் தமிழ் நாட்டில் தான் தாழ்த்தப்பட்ட பட்டியலின வகுப்பைச் சார்ந்த ஏ.வரதராசன் அவர்கள் முதல் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இதன் காரணமாக பின்னர் அவர் இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதியரசராக நிய மிக்கப்பட்டு இந்திய நாட்டிலேயே உச்சநீதிமன்றத்தில் நீதியரசராக நியமிக்கப்பட்ட முதல் தாழ்த்தப்பட்ட பட்டியலின வகுப்பைச் சார்ந்தவர் என்ற பெருமையையும் பெற்றார். நாமும் பெருமை அடைந்தோம் தமிழ் நாடும் பெருமை அடைந்தது.

பின்னர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பட்டியலின வகுப்பைச் சார்ந்த நீதிபதி K.G. பாலகிருஷ்ணன் அவர்கள் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த பொழுதுதான் இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசராக 2000 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டு பட்டியலின வகுப்பைச் சார்ந்த முதல் இந்திய தலைமை நீதியரசராகப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் நீட்சியா கத்தான் முத்தமிழறிஞரின் வழித்தோன்றலான திராவிட மாடல் பொற்கால ஆட்சியின் நாயகரான நமது முதல்வர்நீதித்துறையில்சமூகநீதியைப்பின்பற்றி நீதிபதகள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இது மட்டுமின்றி தென்தமிழ் நாட்டில் மதுரையம்பதியில் சென்னை உயர் நீதிமன்றக் கிளையை உருவாக்கியவர் முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்கள் . எனவேதான் இன்றும் என்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நீதித் துறை மற்றும் வழக்கறிஞர்களின் முதல் மரியாதைக்கு உரியவராக எங்கள் நெஞ்சங்களில் வாழ்கிறார்.

**வழக்கறிஞர்களின் வணக்கத்திற்குரிய முதல்வர்:**

உச்ச நீதிமன்ற நீதிபதிகளே மனம் திறந்து பாராட்டும் அளவிற்கு சீர்மிகு பொற்கால ஆட்சி நடத்தி வரும் நமது மனித நேய மக்கள் முதல்வர் தமிழ் நாட்டில் உள்ள வழக்கறிஞர்கள் மறைந்தால் அவர்கள் குடும்பம் பெறும் நல நிதியை ரூ.7 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக 40 விழுக்காடுகள் உயர்த்தி ஆணையிட்டு 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் சொன்னதைச் செய்தார். அதோடு நில்லாமல் உடனடியாக பாதிக்கப் பட்ட பல வழக்கறிஞர்கள் குடும்பத்திற்கு தன் கையாலேயே பல இலட்சம் நிதி அளித்து, ஒளிவிளக்காக அமைகின்ற வாதங்களை முன் வைக்கும் வழக்கறிஞர்கள் குடும்பத்தில் ஒளிவிளக்கேற்றி வைத்த ஒப்பில்லா முதல்வர் நம் முதல்வர் என்ற பாராட்டைப் பெற்றார்.

மாநில அரசின் சார்பாக வழக்கறிஞர்களின் நல நிதிக்கு மூலதன நிதியாக (Corpus Fund )ரூ20 கோடி வழங்கி தமிழ்நாடு பார் கவுன்சிலின் நிதி ஆதாரத்தைப் பெருக்கி வழக்கறிஞர்கள் நலம் மென்மேலும் மேம்பட வழிவகுத்து சொல்லாததையும் செய்து ஒப்பில்லாப் புகழைப் பெற்றவர்தான் நமது மனித நேய மக்கள் முதல்வர்.

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை கட்ட சென்னையில் 7 ஏக்கர் நிலத்தை ஒதுக்கிய நமது முதலமைச்சரின் முயற்சிகளையும் கட்டுமானத்திற்குத் தேவையான நிதிக்கு ஒப்புதல் அளித்ததையும் முன்னாள் இந்திய தலைமை நீதிபதி D.Y. சந்திரசூட் அவர்கள் மனம் திறந்து பாராட்டியது இன்றும் நம் நினைவில் நிழலாடுகிறது.

**வாழ்க முதல்வர், வளர்க நல்லாட்சி:**

இவ்வாறு நமது தமிழக முதல்வர் அவர்கள் வழக்கறிஞர்களநலன்நாடிநலநிதியை40விழுக்காடுகளுக்கு மேல் உயர்த்திக் கொடுத்தது நீதித்துறையில் சமூக நீதியைப்பின்பற்றி நீதிபதிகள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற தொடர் கோரிக்கை வைத்தது மற்றும் நீதித்துறையின் உள்கட்டமைப்பிற்கும் மேம்பாட்டிறகும் நிதி மற்றும் நிலம் அளித்து முதல்வரின் அரசு மேற்கண்ட நடவடிக்கைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டதால் நீதித்துறையின் போற்றுதலுக்கும் வழக்கறிஞர்களின் நன்றிக்கும் வணக்கத்திற்குரிய முதல்வர் நமது மனித நேய மக்கள் முதல்வர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. வாழ்க முதல்வர் வளர்க நல்லாட்சி.



சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மையின் நல உரிமைபிரிவு சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சைதாப்பேட்டை யில் மாவட்ட துணை அமைப்பாளர் அ.தமீம்அன்சாரி தலைமையிலும், பகுதி செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா. துரைராஜ் எம்.சி., சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், கோ.வி.செழியன், பேச்சாளர் பேராசிரியர் பர்வீன்சுல்தானா ஆகியோர் 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர். எம்.எல்.ஏ.க்கள் ச. அரவிந்த்ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கழக நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், வட்டகழக செயலாளர்கள், உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.